## Department of Food and Dairy Technology

### World Milk Day Celebration

World Milk Day Celebration on 01 June 2021. Our Department Students and Staffs were participated in that programme. On that day Mr.P.V.Gopimanivanan Head, Department of Food and Dairy Technology delivered special talk on World Milk Day in All India Radio 103.3.

# இன்று உலக பால்தினம்

நமது அன்றாட வாழ்வில் பால் மற்றும் பால்பொருட்கள் தவறாமல் இடம்பெறுவது இயல்பானது. சங்க இலக்கியங்களிலும் இதற்குச் சான்றுகள் உள்ளன. பாலில் அதிகப்படியான சத்துகள் இருப்பதே அதற்குக்காரணம். உலக சுகாதார அமைப்பு பாலின் முக்கியத்துவத்தை நமக்கு அவ்வப்போது அறிவுறுத்தி வருகிறது. இதில் புரதம், மாவுச்சத்து, கொழுப்பு இவற்றோடு உடலுக்கு மிகவும் அவசியமான கால்சியம், பொட்டாசியம் உள்ளிட்ட தாதுஉப்புகளும், உயிர்காக்கும் வைட்டமின் போன்றவையும் பாலில் இருப்பதானல் இதை பூரண உணவு என்றும் சொல்கிறோம். பல நாடு



களிலும் பள்ளிகளில் மாணவர்களுக்கு உணவாகப்பால் வழங்கப்படுகிறது. பாலின் பயனை உணர்ந்து சிறப்பிக்கவும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு ( *FAO*) ஜூன் *1* ம் தேதியை உலக பால் தினமாக *2001* ம் ஆண்டு அறிவித்தது. சர்வதேச பால்வள கூட்டமைப்பு மற்றும் அதன் உறுப்பு நாடுகள் இணைந்து பால்,பால்பொருட்களின் அவசியத்தை அனைவரும் அறிந்து கொள்ள இந்நாளை ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட ஒருகருப்பொருளை குறிக்கோளாய் முன்வைத்து உலக பால்தினம் கடைபிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டு *2021* - ல் பால் உற்பத்தியில் தன்னிறைவு என்பதை முன்னிருத்தி சுற்றுச்சூழல் மேம்பாடு ஊட்டச்சத்து மற்றும் சமூகப்பொருளாதார வளர்ச்சியினை கருத்தில்கொண்டு அனைத்து நாடுகளும் பால் உற்பத்திப்பெருக்கத்திற்கு வழிவகை செய்ய வேண்டுமாய் உணவு மற்றும் வேளாண் அமைப்பு வேண்டுகோள் வைத்துள்ளது. பால் உற்பத்தியில் இந்தியா தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருவது நமக்குப்பெருமை. கால்நடைகளின் எண்ணிக்கையிலும் இந்தியா முதலிடம் பெறுகிறது. வர்கிஷ்குரியன் தலைமையில் வெண்மைப்புரட்சியானது *1970* முதல் *1998* ம் ஆண்டு வரை பல கட்டங்களாக செயல்படுத்தப்பட்டது. நாடு முழுவதும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் ஏற்படுத்தப்பட்டு உலகின் முன்னோடித் திட்டமாக செயல்பட்டு வருகிறது. பால் பொருட்கள் ஏற்றுமதி செய்யும் நாடுகள் பட்டியலில் நியூசிலாந்து முதலிடத்தில் உள்ளது. ஜெர்மன், நெதர்லாந்து, பெல்ஜியம், அமெரிக்கா, பிரான்ஸ், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளும் பால்பொருட்களை ஏற்றுமதி செய்து வருகின்றன. பால் பொருட்களை இறக்குமதி செய்யும் வரிசையில் சீனா, இத்தாலி, இந்தோனேசியா, மெக்ஸிகோ, மலேசியா போன்ற நாடுகள் திகழ்கின்றன. உலக பால் தினமானது உற்பத்தியாளர்கள், விவசாயிகள், அனைத்து பால் உற்பத்தி ஒன்றிய அமைப்புகள், தொழிற்சாலைகள் மற்றும் தனியார் பால் நிறுவனங்கள் கொண்டாடுவது இயல்பான நிகழ்வு. தேசிய வேளாண் மற்றும் உணவு ஆராய்ச்சி நிறுவனங்கள், பால்வள் மேம்பாடு மற்றும் ஆய்வு நிறுவனங்கள் போன்றவையும் உலக பால் தினத்தை அனுசரித்து வருகின்றனர். உலகளவில் கொரோனா பெருந்தொற்று பரவுகின்ற இன்றைய சூழலில் நமது சமூக, பொருளாதார கட்டமைப்பு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையிலும் பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை தொழில் உலக மக்களுக்கு உணவு வழங்கி காப்பதிலும், விவசாயிகளின் பொருளாதாரப் பின்னடைவை சீர்செய்வதிலும் பெரும் பங்கு வகிப்பதை நமது கண்முன்னே காண்கிறோம். பால் உற்பத்தியாளர்கள், பண்ணை தொழிலாளர்கள், பாலை நமக்கு கொண்டு வந்து சேர்த்திடும் அனைத்து நல்லோரையும் நன்றியுடன் நினைத்து உலக பால்தினத்தை உள்ளத்தில் மட்டும் உவகையுடன் கொண்டாடி இல்லத்தை மகிழ்ந்திருப்போம். நன்றி.




**தொகுப்பு**
**பெரு.வீர.கோபி மணிவண்ணன்,**
**துறைத்தலைவர், உணவு மற்றும் பால்வளத்துறை,**
**மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை.**
**செல்போன்.9489556491**
**இமெயில் : gopi.daily11@gmail.com**